1995 மார்ச் 24]

குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் முழுவதையும் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் சிறுசேமிப்புத் துறையின் மூலமாக ஓரளவுக்குக் கணிசமான அளவுக்கு, தொகை ஈட்டுகிற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 700 கோடிக்கு மேல் நிகர இருப்பாக வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சிறப்பு ஊக்கத் தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக வழங்கப்படுகிறதா அல்லது மாநகராட்சி மூலமாக அனுப்பப்படுகிறதா என்று அறிய முற்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத்தான் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரங்களை அறிந்து சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 82, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

82—

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்

***20448—**திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் அம்மாபேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நிதிநிலை காரணமாக அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் எண்ணம் அரசின் குறிப்பில் இல்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சிறப்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் இதயத் துடிப்பாகவும், செந்தமிழ் நாட்டின் சீர்மிகு தலைவியாகவும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற மக்களின் வளம் பெருக்கும் வற்றாத ஜீவ ஊற்றாகவும் விளங்கி வருகிற எங்களுடைய தானைத் தலைவி, நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் தமிழக முதல்வருடைய ஆட்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அம்மாவினுடைய ஆசியால் எங்களுடைய அந்தியூர் தொகுதியில் உள்ள அம்மாபேட்டையில் சார்பதிவாளர் அலுவலகத்தைக் கடந்த ஆண்டு கொடுத்தார்கள். நன்றி மறப்பது நன்றன்று என்ற அடிப்படையில் அவர்களுக்கு நன்றியைச் சொல்லும்முகத்தான் நான் கடமைப் பட்டிருக்கிறேன். அங்கே சார்பதிவாளர் அலுவலகத்தை ஆரம்பித்து விட்டார்கள். அங்கே இட வசதி இருக்கிறது, ஆகவே அருள் நெஞ்சமும், பொருள் நெஞ்சமும் நிறைந்த அமைச்சர் அவர்கள் தயைகூர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களிடம் சொல்லி இவ்வாண்டு அந்தப் பகுதியில், அதாவது வருவாய்த் துறையைச் சேர்ந்த இடங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தால் அதனைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி மக்களின் நலனைப் பெருக்குகிற தாயுள்ளம் படைத்த நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அடித்தளத்து மக்களுக்காக என்னென்ன செய்யவேண்டும் என்று சிந்தித்து இந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்ததிலிருந்தே அவர்கள் அடித்தளத்து மக்களை மறக்கவில்லை என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் இதற்கு வேண்டிய நிதிநிலை இப்போது இல்லை என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல பட்டாக்களைக் கேட்டபோது அந்த ஆட்சி செய்யாத சூழ்நிலை இருந்தது. ஆனால், நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஏராளமாக பட்டாக்களும், இப்படிப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களையும் கொடுத்திருக்கிறார்கள். நிதிநிலையை நானும் அறிவேன். இந்த ஆண்டு இல்லை என்று சொன்னாலும்கூட தயவுசெய்து வரும் ஆண்டிலாவது அதனைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்களா, ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபோது, அவர் தொகுதியில் பட்டா கொடுக்கப்பட்டதைப் பற்றி சொன்னார். அவர்கள் தொகுதிக்கு மட்டும் அல்ல, அவர்கள் தொகுதிக்கு எப்படி கொடுக்கப்பட்டதோ அதேபோன்று தமிழ்நாடு முழுவதும் கொடுக்க வேண்டுமென்று புரட்சி தலைவி அவர்கள் உத்தரவிட்டதன்பேரில் கொடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). எல்லா தொகுதிகளும் கவனிக்கப்படுவதுபோலவே உறுப்பினரின் தொகுதியும் நல்ல முறையிலே கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 84, திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

84—

இரும்பை ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் அமைத்தல்

***44500—**திரு. செ. ஆறுமுகம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் ஒன்றியத்தில் இரும்பை ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம்–ராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் ஒன்றியம், வானூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட இரும்பையில் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது.